ஸ்ரீ கோவர்த்தன குருஜி

டாக்டர் ஹரிப்ரியா ரங்கராஜன்

# காமாட்சி பாபாவின் எட்டு சித்தாந்தங்கள்!

## அருளாடல்

கடைசியாக ஆகஸ்டு மாதம் 1989ல் நடந்த விசேடத்தை கூறி முடிக்கிறேன்.

குருஜி தன் 20 பக்தர்களோடு காஞ்சிபுரத்தின் அதிதேவதையான காமாட்சி அன்னையை தரிசிக்கச் சென்றார். அவருடன் 20 பக்தர்கள் வர, அந்தக் கோவிலின் சீனியர் Priestக்கு(சீனியர் அர்ச்சகர்) காமாட்சி பாபாவின் மீது மிகவும் பரிவு, பக்தி, அன்பு, மரியாதை உண்டு. அன்று சென்றபோது குருஜியோடு இருபது பக்தர்களுக்கும் மேலாகவே வந்து விட்டனர்.



அந்த அர்ச்சகர் உத்தரவோடு அன்னை காமாட்சி அம்மனுக்கு குருஜி அபிஷேகம் செய்யத் தொடங்கினார். அவருடைய பக்தர்கள் லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்ல, முதல் பத்து நிமிடங்களிலேயே பால் கொஞ்சம் கொஞ்சமாக குறைவதாக இருந்தாலும் லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லி முடிக்கிற வரை பால் மிகவும் அதிசயமாக பாத்திரத்தின் அடியில் இருந்துக் கொண்டே இருந்தது.

பிறகு மதிய உணவு அந்த அர்ச்சகர் வீட்டிலேயே ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவருடைய மனைவியிடம் 20 நபர்களுக்கு என்றுதான் கூறப்பட்டிருந்தது. ஆனால் சாப்பிட வரும்போது 50 நபர்கள் ஆகிவிட்டனர். அதனால் சமைத்த சாப்பாடு இன்னும் 30 பேருக்கு எப்படி ஆகும். அந்த அர்ச்சகர் மனைவி மிகவும் சிரத்தையோடு தானாகவே சமைத்து இருந்தாள். அதனால் அவள் மறுபடியும் சமையல் செய்து போடுவதற்கு போனால் இலையில் உட்கார்ந்து இருப்பவர்களை எப்படி காக்க வைப்பது? அப்போது காமாட்சி பாபா சமையல் அறையில் சென்று தன் வலது கையை ஒரு பாத்திரத்தின் மீதும் உயர்த்தி bless செய்தார்.

அந்தசமயம் அந்த அம்மா காமாட்சி பாபாவிடம் தன் சிக்கலைப் பற்றி எதுவுமே கூறவே இல்லை. ஆனால் அவளுக்கும் அவளுடைய கணவர் அர்ச்சகருக்கும குருஜியின் மீது மிகவும் அதீதமான நம்பிக்கை இருந்தது. அதனால் அவள் முழுமையாக குருஜியிடம் தன் மனதிலேயே சொல்லிக் கொண்டு விட்டாள். சில பக்தர்கள் நன்கு தெரிந்து கொண்டார்கள் அந்த மதிய உணவு 20 நபருக்கு மட்டுமே சமைக்கப்பட்டது என்று. அதனால் அவர்கள் சமையல் அறையில் சென்ற எந்த item குறைவாக உள்ளது என்று பார்த்தார்கள். காமாட்சி பாபா அமைதியாக நின்று கொண்டு இருந்தார்.

பிறகு எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். அர்ச்சகர் மனைவிக்கு சாம்பார் குறைவாக ஆகிவிடுமோ என்று கவலையாக இருந்தது.

ஆனால் அவளுக்கே புரியவில்லை. எத்தனை முறை சாம்பார் எடுத்தாலும் அதே அளவில் மறுபடியும் இருக்கும். பிறகு எல்லோரும் சாப்பிட்டு முடிந்த பிறகு அந்த அம்மா குருஜியிடம் மிகவும் ஆச்சரியத் தோடு தான் கண்ட சம்பவத்தைப் பற்றி, அதாவது சாம்பார் குறையாததற்கு தெளிவு காண விரும்பி னாள். அப்போது சில பக்தர்களும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். உடனே குருஜி என்ன சொன்னார் தெரியுமா?

அவர் சிரித்துக் கொண்டே கூறினார்: "இதெல்லாம் தேவி காமாட்சியின் விளையாட்டு". ஆஹா! அன்னை காமாட்சி தாயார்தான் குரு காமாக்ஷி கோவர்தன் என்று பெயர் கொண்ட மஹானின் தாய் என்பதை நிரூபித்துவிட்டாளோ? தாய் ஒருபோதும் தன் மகனை விட்டுக் கொடுக்க மாட்டாள். அப்படியிருக்க தன் மகனை கோவர்த்தன் என்று பெயர் கொண்டு தன் வீட்டுக்கு 50 என்ன, 100 பேர் வந்தாலும் அம்மா அன்னம் இடுவாள் என்பதை நமக்கு காண்பித்துக் கொடுத்துவிட்டார் போலும்.

இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவெனில், குருஜி முதல் பந்தியில் சாப்பிட்டுவிட்டபோதும் தன் இருப்பிடத்தில் இருந்து கொண்டே எல்லோரும் சாப்பிடும் வரை அசையாமல் பார்த்துக் கொண்டு இருந்தார். கடைசியில் அந்த அர்ச்சகரின் வேலைக்காரப் பையன் சாப்பிட்ட பிறகு பார்த்தால் எந்த பாத்திரத்திலும், எந்த ஒரு துளியும் இல்லவே இல்லை.

இதுதான் குருவின் மகிமை. காமாட்சி கோவர்தன் பாபா 10 சித்தாந்தங்களை தன் பக்தர்களுக்கு கூறியுள்ளார். அதை அவர் சொல்லிலேயே ஆங்கிலத்தில் உங்கள் யாவருக்கும் படிப்பதற்காக போட்டு உள்ளேன்.

காமாட்சி பாபா பல பல நல்ல நல்ல miracles செய்து, பக்தர்களுக்கு உதவியுள்ளார். அவர்களை நல்ல பாதையில் அழைத்துச் சென்று உள்ளார். அவர் ஆசிர்வாதத்தால் எழும்பிய Organisationதான் Divine Mother Society. இது Red Hills -ல் இருக்கிறது. இதைப் படிக்கும் ஒவ்வொரு நண்பரும் Divine Mother Society ல் நடக்கும் குருஜி ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

காமாட்சி பாபாவின் moto என்ன தெரியுமா?

**"மாணவ ஸேவா மாதவ ஸேவா"**

இத்துடன் காமாட்சி கோவர்தன் பாபாவின் எட்டு சித்தாந்த வாக்கியங்களைக் கூறியுள்ளேன்.

1. எப்பொழுதும் உன் மனதை பரிசுத்த மாகவும் எந்தவித அனாவசிய கவலையிலிருந்தும் விடுவித்துக் கொண்டும், மேலும் எந்தவிதமான முரண்பாடான பேச்சுக்களை மற்றவர்களிட மிருந்து கேட்டாலும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இரு.

2. உன் மனதிலேயே பிரார்த்தனை மூலம் கோயில் கட்டு. அதற்கு தேவைப்பட்ட பொருட்

**நீ எப்பொழுதும் மற்றவர்கள் சந்தோஷத்தைப் பார்த்து சந்தோஷப்பட வேண்டும். அதேசமயம் மற்றவர்கள் துக்கத்தைக் கண்டு ஆனந்தப்பட்டால் அது பாவம். உன் மனதுக்கு ஒருபோதும் அப்படிப்பட்ட ஆனந்தத்தை அனுபவிக்க இடம் கொடுக்காதே.**



கள் அடக்கம், அகம்பாவம் அற்ற எளிமை, பரிவு, மன்னிப்பு, கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை, நேர்மை, எல்லா நல்ல குணங்களுடைய ஒருமைப் பாடு, தியானம், அதே சமயம் எந்த ஒரு பற்றும் இல்லாமல் - எந்த ஒரு குறிப்பிட்ட மதம்தான் உயர்ந்தது என்று எடுத்துக் கொள்ளாமல் அமைதியாக தெய்வீக வழிபாடு செய்பவனாக இரு.



3. நீ எப்பொழுதும் மற்றவர்கள் சந்தோஷத்தைப் பார்த்து சந்தோஷப்பட வேண்டும். அதேசமயம் மற்றவர்கள் துக்கத்தைக் கண்டு ஆனந்தப்பட்டால் அது பாவம். உன் மனதுக்கு ஒருபோதும் அப்படிப்பட்ட ஆனந்தத்தை அனுபவிக்க இடம் கொடுக்காதே. அது உன்னையே கெட்ட செயலுக்குள் சேர்த்துவிடும்.

4. யாரிடமும் அன்பும் பரிவும் காட்டும்போது அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதே.

5. உன் உறவுகளில் பொறாமை என்னும் தீயை நுழைய ஒருபொழுதும் இடம் தராதே. ஏனெனில் இது உன் உறவை எந்த நல்ல காரணத்துக்காக வைத்துள்ளாயோ அதை முறித்துவிடும். பொறாமை என்பது உன்னுடைய சரித்திரத்தின் நிழல். அத எப்பொழுதும் செயல்படாத சுபாவத்தையே எடுத்துக் காட்டும். உன் நிழலுக்கு பல கோணங்கள் உண்டு. ஆனால் பொறாமைக்கு எந்த ஒரு அளவுகோலும் கிடையாது. நீ நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். என்னவெனில் பொறாமை உன் சந்தோஷத்தையும் அழித்துவிடும். உன் மன அமைதியையும் அழித்துவிடும். அதைப் போலவே மற்றவர்கள் சந்தோஷத்தையும் அழித்துவிடும்.

6. ஒருபொழுதும் கோபத்துக்கு முதலிடம் தராதே. அது உன் மன நிம்மதியை அழித்துவிடும். அது உன் உள்ளத்தில் பைத்தியக்காரத் தன்மையை உண்டாக்கும். உன்னுடைய மென்மையான சுபாவத்தை முழுமையாக எரித்துவிடும். மேலும் உன் உள்ளத்தில் இருக்கும் நியாய சிந்தனையை அலைய வைக்கும்.

7. எப்பொழுதும் கெட்ட முயற்சிக்கு அதிகமாக ஈடுபாடு கொடுக்காதே. உன்னுடைய அந்த திணிக்கையினால் பாவச் செயல்களும் கூட அந்த தராசில் எடை போடப்படும்.

8. எப்பொழுதும் உன் அதிகாரத்தின் நிலையில் அன்பு, பரிவு, மேலும் கருணை என்ற மூன்று சொற்களுக்கும் முழு சுதந்திரம் கொடு. இந்த மூன்றும் இல்லாத எந்த அதிகாரமும் பயங்கர சுபாவத்தோடு இருக்கும்.

இந்த எட்டு Principles-ம் குருஜி காமாட்சி பாபாவின் அருள்மொழிகள் ஆகும்.

## நூபுர கங்கை

பகீரதனால் கங்கை நீர் கொண்டு வரப்பட்டது. கங்கை வட தேசத்தில் ஓடுகிறாள். அதுபோலவே தென்னகத்திலே பாண்டிய நாட்டில் அழகர் கோவிலிலும் ஒரு கங்கை ஓடுகிறது. இதற்கு 'நூபுர கங்கை' எனப் பெயர்.

**நூபுர கங்கையின் வரலாறு :** மகாபலி சக்கரவர்த்தியிடம் 3 அடி மண் விஷ்ணு பகவான் கேட்டார், மகாபலி. பூலோகம், மேல் உலோகத்தைக் கொடுக்க 3வது அடிக்கு நிலமில்லாமல் போக தன் தலையில் கால் வைக்க சம்மதிக்கிறான்.

அச்சமயம், மூவுலகை அளக்க, தனது காலை தூக்கிய போது அத்திருவடியை பிரம்மன் விஷ்ணுவின் பாதத்தைக் கமண்டல நீரினால் அபிஷேகித்து, பூசிக்க, அச்சமயம் விஷ்ணுவின் பாதத்திலிருந்து ரத்தினப் பொற்சிலம்பு அசைகின்றன. அதிலிருந்து நீர்த்துளிகள் அழகர் மலை மீது விழ, அது ஆறாகப் பெருகியது. விஷ்ணுவின் சிலம்பிலிருந்து வந்த சிலம்பாறு 'நூபுர கங்கை' என்றழைக்கப்படுகிறது.

கோடைகாலத்தில் குளிர்ச்சியைக் கொடுக்கும் கொடைக்கானலே அழகர் மலை.

– ரமணதாலி